## கவிதை - எனது தாய் பூமி

இயற்கை அன்னையே
இன்பமுற்று எழுதுகிறேன்.
இத்தனை ஆண்டுகளாய் இயங்குகிறாய் நீ.
நதியென நடக்கிறாய்.
ஆறென ஆடுகிறாய்.
அருவியென அசைகிறாய்.
நீருக்குள்ளே நீ நிற்கிறாய்.
நீர் போகும் இடமெல்லாம்
இயற்கையை வளர்க்கிறாய்.
மலரென செடியென
கொடியென குதூகலிக்கிறாய்.
மாக்களும் மனிதர்களும்
மனமகிழச் செய்கிறாய்.
உன்னைப் புகழ நான் ஒரு காரணியல்ல.
இருப்பினும், கூறுகிறேன் கேள்.
என் தாசனாகிய ஈசனும் தன் உடலில் பாதி கொண்டான்.
பரந்தாமன் பள்ளி கொள்ளும் ஆதிசேடனும் தலைமேல் கொண்டான்.
பாலகன் கிருஷ்ணனும் வெண்ணெய் உண்ட வாயினுள் கொண்டான்.
எத்தனை சிறப்புகள்? எப்படிக் கூறுவேன்.
இன்றோ நீ பொலிவிழந்து விட்டாய்.
கிருஷ்ணனின் துவாரகை போல் தொலைந்து விட்டாயோ?
இல்லை நான் தான் தொலைத்தேன்.

ஜே.வெங்கடேஷ் - 2020-2023

## தாவரவியல்

இலைகளைவிட பூக்கள்
அதிகமுள்ள செடியை
இன்று பார்த்தேன்
மஞ்சள் நிறப்பூக்கள் அவை
பழுப்பு நிற இலைகள் கொண்ட
செடியைப் பார்த்திருக்கிறேன்
இதற்கு முன்னால்
பச்சை நிற நரம்போடும்
வயலெட் நிற இலைகளை
உதிர்ந்த கொண்டு நின்ற செடியை
இலைகளில் பின்புறம் முட்கள் கொண்ட
செடியை
கணுக்களில் சிறு சிறு காய்கள்
தொங்கும் செடியை,
தொட்டால் குத்துகிற சிரிக்கிற
இலைகளை மூடிக்கொள்கிற
தொடவே பூக்கிற காய்க்கிற கனிகிற
எத்தனையோ செடிகளைப்
பார்த்து விட்டேன்
உள்ளதைச் சொன்னால்
என் வாழ்நாளில் நான் இன்னும்
பார்க்கவில்லை
ஒரு செடியைக் கூட....

M.Nithya - 2019-2022

## இயற்கை

எங்களுக்கு
அனைத்தையும்
கொடுக்கிறாய்.
நாங்கள் கொடுக்கும்
தீமைகள் அனைத்தையும்
ஏற்றுக்கொள்கிறாய்
ஆனால்
உன்னுடைய
கோரதாண்டவத்தை
யாராலும் தாங்கிக்
கொள்ள முடியாது
நீயே
இயற்கை....

ப.மனோசித்ரா
2019-2022

## நம்பிக்கை

இரண்டு நண்பர்கள் ஒரு மூங்கில் காட்டின் வழியாக தங்களது வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் செல்லும் வழியில் நடுவில் ஒரு பாலம் உடைந்த நிலையில் இருந்தது. அதைப் பார்த்து ஒருவன் சொன்னான், ”நம்மால் இன்று வீட்டிற்குச் செல்ல முடியாது. நாம் ஏதாவது விலங்கிற்கு உணவாகப் போகிறோம்” என்று. ஆனால் இன்னொருவனோ மிகவும் துணிச்சலுடன், நீ ஏன் இவ்வாறு தீய எண்ணங்களை சிந்திக்கிறாய். நம்மைச் சுற்றி இருப்பதோ மூங்கில் காடு. நான்கு அல்லது ஐந்து மூங்கில் கம்புகளை எடுத்துவைத்தால் பாதை உருவாகிவிடும். நாமும் சுலபமாக வீட்டிற்கு செல்லலாம் என்று கூறினான். இரண்டாவது நண்பன் சொன்னது போலவே மூங்கில் கம்புகளை எடுத்து வைத்து பாதை உருவாக்கினார்கள். இந்தப் பாதை மூலமாக இருவரும் மிகவும் பத்திரமாக வீட்டிற்கு சென்று சேர்ந்தனர்.

நாம் சிந்திக்கும் சிந்தனைகள் நல்ல எண்ணங்களாக இருப்பின் மன பலம் தானாக வந்து சேரும். ஆகவே அனைவரும் எப்பொழுதும் நல்லதையே சிந்திக்க வேண்டும் அதையே செயல்படுத்த வேண்டும்.

நான் இந்தக் கதையை எழுதுவதற்கு முன் உதாரணமாக இருந்தவர்கள் எனது துறையைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்கள் தான்.

க.முத்துமாரி - 2019-2022


## நீர்

மலைகளின் மார்பில் ஊறி
மண்ணை ஊட்டப்படுத்தும் உயிர் துளியே
செல்லும் வழியெல்லாம் செல்வம் செழிப்பாக்கி
உன்னுள் உயிர்களையும் உன்னால் உயிர்களையும்
வாழ வைத்துக் கொண்டிருக்கிறாய்......
துளியில் ஒலியாகவும், ஓடையில் ஓசையாகவும்
அருவியில் சத்தமாகவும், சங்கீதம் படிக்கிறாய்
பாறைகளில் உருண்டும், பாதாளத்தில் பறந்தும்
ஓடையில் ஊர்ந்தும், கடலில் கரைந்தும் போகிறாய்...
உன் மாமன் மதிய வெயிலோ
உன்னை ஆவியாக்கி அணைத்துக்
கொள்கிறான்.....!
நீயோ அவன் கண்களை மூடி
எங்களை இளைப்பாற்றுகிறாய்
உயிரினங்களை காப்பது கடவுள் என்றால்
அனைத்து உயிர்களுக்கும் நீயே
நீரே கடவுள்....!

செ.பால முனிஸ்வரன் - 2019-2022



V.Meena - 2017-2020



M.Vijayalakshmi - 2019- 2022


# SKC ALUMNI

Connects ‘U’ with your classmates

A Newsletter published from : SRI KALISWARI COLLEGE (Autonomous), SIVAKASI - 626 130. TAMILNADU. INDIA

(Autonomous - Co-Educational - Affiliated to Madurai Kamaraj University, Madurai - Re-accredited with (3rd cycle) 'A' grade by NAAC with CGPA of 3.11

Phone : (04562) 232648, 232264 E-Mail : kaliswaricollege@gmail.com College Website : www.kaliswaricollege.edu.in

Volume - 13 Patron: Shri. A.P. Selvarajan, Secretary, Sri Kaliswari College (Autonomous), Sivakasi September 2022-2023



## Editorial Board

Editor - in- Chief: Dr.P.K.Balamurugan
Principal

Co-ordinator : Prof.S.Alagappan
Co-ordinator, Alumni Association

**Alumni Association Office Bearers:**

President : Dr.V.Pradeepa
Vice – President : Mrs.S.Kamalaveni
Secretary : Mr.S.Muthukumar
Joint – Secretary : Dr.M.Rajeev Gandhi
Treasurer : Mr.T.Gurunathan

Editors: Ms.P.R.Chowmya
Mr.P.Nishanthkumar
Mrs.I.Santhiya
Mr.K.T.Kirubasekar


### About The College

Sri Kaliswari College is marching ahead on the path of progress under the able guidance of the philanthropists of Sri Kaliswari Trust of Sivakasi. It provides value based quality education to the rural youth of this region. The college is a self financed, Autonomous and Co-Educational Institution affiliated to Madurai Kamaraj University, Madurai. The College is passionately committed to offer quality education and to maintain uncompromising high standards in discipline and decorum.

The college offers an impressive number of 17 undergraduate courses, 9 postgraduate courses. In addition, the College offers a Certificate course in Gandhian Thought for all the First year students to inculcate the moral values of truth and non-violence. An additional feather in the cap of the college is the sanctioning of community college by UGC. Today, Sri Kaliswari College is a class by itself renowned for its academic excellence.

### About the Alumni

Alumni Association of Sri Kaliswari College was formed in the year of 2004-2005 comprising 144 alumni of the first and second batches.

Shri A.P.Selvarajan, Secretary of this institution inaugurated the alumni association on 30th March 2005. In the beginning, the enrollment for the alumni was done annually. But now they are given life membership. The alumni visit their alma mater often and several meetings are arranged to create awareness among the outgoing students about their future prospects. An Alumni book bank is created to issue books to our students.

At present, twenty seven alumni staff serve as faculty in our institution. The newsletter is another milestone in our journey. Right from the inception of our college, the alumni association of the college organizes various fine arts programs for our students.

Every year the college SKC Alumni Association celebrates Fine Arts Day.

### From the Editorial Board

It is with profound feelings of joy and gratitude that we release the eighth edition of SKC - Alumni newsletter into the hands of the academic community at large and particularly the alumni. This newsletter gives a golden opportunity to nourish evergreen memories at the SKC campus besides building loyalty towards our alma mater.

Again, it makes one aware of the academic achievements made in the institution after the graduation. The Alumni's Significant contribution is to promote, influence and support educational, cultural and social life of their alma mater by organizing a number of events to not only highlighted but also to appreciate. We are confident that Alumni Association would play a major role in the years to come.

### From our Secretary

It is marvellous to find a positive and healthy response from the Alumni every academic year. It shows their love and gratitude towards their alma mater. The eighth issue of the Alumni Newsletter throws light on the energetic and enthusiastic activities of the Alumni Association. The Alumni Association always concentrates on the welfare of the poor and downtrodden in the society, I can feel the humane tendency behind their dedicated and devoted service, the Alumni's creativity and histrionic potentials are fostered and nurtured through their contribution, this News Letter of articles to Association to continue its endeavors with the same spirit in the ensuing years I convey my best wishes to the Alumni and the Association!

### From our Principal

The Alumni Association of Sri Kaliswari College is being gradually strengthened by regular activities and timely sponsorships. Let us hope to bind the out gone Kaliswarians to their alma mater through newsletters and annual meetings which will foster the feeling of oneness.



## Interest - Free Alumni Aid (2022-2023)

| Name & Class | Amount (Rs.) |
|---|---|
| M.Dharani Sri - I B.Com | 11,390.00 |
| K.Selvapriya - III Biotech | 13,685.00 |
| V.Alagumurugan - III B.Sc CS | 14,610.00 |
| M.Salini - II B.Sc IT | 33,100.00 |
| P.Balaji - II B.Sc IT | 26,100.00 |
| G.Mareeswari - I B.Sc IT | 13,550.00 |
| M.Prasanthini - I B.Sc IT | 13,550.00 |
| R.Arjun - I B.Sc IT | 13,550.00 |
| P.Bilal Mohamed - I B.Sc IT | 13,550.00 |
| M.Poosamani - I B.Sc IT | 13,550.00 |
| K.Selvin - I B.Sc IT | 13,550.00 |
| G.Dineshkumar - III B.Sc IT | 13,530.00 |
| M.Suriyakanth - III B.Sc IT | 13,530.00 |
| N.Mahadevi - II B.Sc IT | 13,450.00 |
| A.Asmi Sabana - II B.Sc IT | 13,450.00 |
| P.Keerthana - I BBA | 11,390.00 |
| S.Kaleeswari - II BBA | 10,560.00 |
| T.Arunandiyan - II BBA | 10,560.00 |
| V.Madhavan - II BBA | 10,560.00 |
| J.Muthupandian - II BBA | 10,560.00 |
| D.Vikram - II BBA | 10,560.00 |
| M.Yogesh - II BBA | 10,560.00 |
| K.Srikanth - II BBA (CA) | 12,700.00 |
| S.Vinoth - II BBA (CA) | 12,700.00 |
| B. Bairavi - II BCA | 9,300.00 |

Total Count : 25
Total : 3,43,595.00




*Teacher's Day Celebration*

*On 5th September 2022, the Alumni Association of the College celebrated Teachers Day. As a part of Teachers Day Celebration, Competitions were conducted for the faculty members and the winners were awarded prizes. Dr.R.Narayanaprakash, Senior Faculty, Department of Biotechnology, Sri Kaliswari College (Autonomous), Sivakasi was the Chief Guest.*

## DEPARTMENT ALUMNI ACTIVITIES

















## தமிழ்மொழி

தமிழ்மொழி எங்கள் தாய்மொழி
தரணியே காக்கும் தமிழ்மொழி
இளங்கவிதையாய் நாவில் தவழும் மொழி
தமிழ்மொழியைக் கற்றுப்பார்
உலகத்தையே கட்டிக் காக்கலாம்
தமிழா தமிழை நேசித்துப்பார் - தமிழ்
உன்னை நேசிக்கும் என் தாய்மொழி
உலகில் கிடைத்த அற்புத மொழி
இலக்கணம் இலக்கியம் புலமை கொண்ட மொழி
என் தாய்மொழி என்று சொல்வது பெருமை
தமிழன் என்று கூறுவோம் தரணியே வெல்வோம்
தொன்மையான மொழி எங்கள் தமிழ்மொழி

ரா.சிநேகா
2019-2022

## மழை

மழையின் சிக்கனம் சாரல்
மழையின் ஆடம்பரம் வெள்ளம்

## இதயம்

நீ உறங்கி எழும் வரை உனக்காக
நான் துடித்துக் கொண்டே இருக்கின்றேன்.
நான் உறக்கத்தில் இருந்து எழவில்லை
எனில் எனக்காகத் துடிப்பவர் யாரோ?

ஆ.சோனியா
2020-2023

## நிழல்

சிறு வயதில்
உன்னைக் கண்டுஅஞ்சியபோது
தெரியவில்லை
வாழ்நாள் முழுவதும் நீ
என்னுடன் வரப் போகிறாய் என்று

## ஆசை

நினைப்பது நடப்பதில்லை
நினைக்காமலும் இருக்க முடியவில்லை
நிறைவேறாத ஆசைகளை

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஒருமுறை தான்
மகிழ்ச்சியோடு வாழ வேண்டும்
இன்பம் துன்பம் கலந்த வாழ்க்கையாக
அமைவது தான் வாழ்வு
வாழ்வின் முயற்சி
வெற்றியை நோக்கிச் செல்வது

## அப்பா

உலகத்தின் மிகப்பெரிய சிகரம் - அப்பா
உயிரின் மறுபிறப்பு அப்பா
தாய்க்கு நிகரான தந்தை ஆனால்
தன்னம்பிக்கையோடு இருப்பது தந்தை

பி.மணிமாறன் - 2019-2022

## அன்பு கவிதை

அன்பு என்பது
ஒரு சிறந்த பரிசு
அதை பெற்றாலும்
கொடுத்தாலும்
சந்தோஷமே...
அன்புடன்
பேசுங்கள்
அது உங்களை
அழகாக்கும்...
பூக்களுக்கு பேச தெரியாது -
தெரிந்திருந்தால்
சொல்லி விடும் உன்னை
போல் ஒரு நண்பன் எனக்கு
கிடைத்திருந்தால் தினம் தினம்
வாடாமல் இருப்பேன்....
நீ தேடிப்போகும் நட்பு அழகானது
உன்னைத் தேடி வரும் நட்பு ஆழமானது
உயிர் பிரிந்தாலும் நட்பு பிரியாது

வை.பவித்ரா
2019-2022

## மேசை

உன்னை அடிக்கடி வீணையாக்குவேன்
உன்னை என் மெத்தையாக மாற்றுவேன்
நீ எனது புத்தகங்களை தாங்கும்
சுமை தாங்கியாக ஆக்குவேன்
உன்னால் தான் நான்
கல்வெட்டாய் செதுக்கத் தொடங்கினேன்
உன்மீது சாய்ந்துதான்
பல கனவுகள் காணத் தொடங்கினேன்
அதனுள் மடங்கி கிடக்கிறேன்
எனது நண்பனாக இருந்தாய்
கல்லூரி பயிலும் வரை
என்னைவிட்டு பிரிந்து விடாதே
கல்லூரி பயிலும் வரை

பி.பாரதி - 2019-2022

## இயற்கை

குடைபோல் நிழல் கொடுக்கும் மரம்
குருவிகளுக்கு தஞ்சம் கொடுக்கும்
அரவணைப்பு
முறிந்து விழுந்தாலும் விறகாகும் புகழ்
கனியைக் கொடுத்து உதவும் அற்புதம்
தன்னை அழிக்க வருபவனுக்கும்
உயிர் கொடுக்கும் வள்ளல்
நினைத்துப் பார்த்தால்
மரமே கடவுள் என்ற எண்ணம்
பூமிக்கு இயற்கை கொடுத்த
பச்சை கம்பளம் புல்வெளி
நுனிப்புல் மேயும் முயல்
அடிப்புல் வரை மேயும் மாடு
பறந்து திரியும் பட்டாம்பூச்சி
பச்சைப்புல் வெளியின் கதகளிகள்
மரத்தை வெட்டுகிறோம் இரக்கமில்லாமல்
குளத்தை மூடுகிறோம் இரக்கமில்லாமல்
பாலித்தீனை எரிக்கிறோம் பயமில்லாமல்
குப்பையை தெருவில் வீசுகிறோம்
புத்தியில்லாமல்

க.மாலதி - 2019-2022



R.Kaarthikeyan - 2020-2023